பிராந்திய அளவில் ஆயுதங்கள் கட்டுப்பாடு

ஐ.நா.வில் வரைவுத் தீர்மானத்துக்கு எதிராக இந்தியா, இஸ்ரேல் வாக்களிப்பு

நியூயார்க், நவ. 3: அணு, ரசாயனம், உயிரியல் ஆயுதங்கள் அல்லாத பிற ஆயுதங்களை, பிராந்திய மற்றும் துணை பிராந்திய அளவில் கட்டுக்குள் வைத்திருக்கும் தீர்மானத்துக்கு எதிராக, ஐ.நா.வில் இந்தியா, இஸ்ரேல் வாக்களித்தன.

பாகிஸ்தான்,பெலாரஸ் ஆகிய நாடுகள் இணைந்து கொண்டு வந்த இந்த வரைவுத் தீர்மானம் மீது, அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் திங்கள்கிழமை வாக்கெடுப்பு நடைபெற்றது.

இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 180 நாடுகள் வாக்களித்தன. இந்தியாவும் இஸ்ரேலும் மட்டும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. எந்த நாடும் வாக்கெடுப்பை புறக்கணிக்கவில்லை.

தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது குறித்து ஐ.நா.வுக்கான இந்திய தூதரக அலுவலகத்தின் முதல் செயலர் அன்மோல் ஷேர் பேடி கூறியதாவது: உலக நாடுகளின் பாதுகாப்பு சார்ந்த பிரச்னைகள், அந்த நாடுகளின் பிராந்திய எல்லைக்குள் மட்டும் முடங்கிவிடுவதில்லை.

அணு, ரசாயனம், உயிரியல் ஆயுதங்கள் அல்லாத பிற ஆயுதங்களைக் கட்டுக்குள் வைப்பது என்பது உலகளாவிய விவகாரமாகும். இந்த விவகாரத்தை பிராந்திய,துணை பிராந்திய அளவில் மட்டுமே அணுக வேண்டும் என்பதை இந்தியா முழுமையாக ஏற்கவில்லை.

கடந்த காலங்களில் இந்தியா கடைப்பிடித்து வந்த நிலைப்பாட்டுக்கு ஏற்பவே, இந்தத் தீர்மானத்துக்கு எதிராக இந்தியா வாக்களித்தது என்று தெரிவித்தார்.

2029-க்குள் ரூ.50,000 கோடி பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதிக்கு இலக்கு

புது தில்லி, நவ. 3: 'வரும் 2029-ஆம் ஆண்டுக்குள் ரூ. 3 லட்சம் கோடி மதிப்பில் பாதுகாப்புத் தளவாட உற்பத்திக்கும், ரூ.50,000 கோடி மதிப்பில் அவற்றின் ஏற்றுமதிக்கும் இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது' என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

ராஜஸ்தான் மாநிலம், ஜெய்சால்மரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற ராஜ்நாத் சிங் பேசியதாவது:

நாட்டின் பாதுகாப்புத் தேவைகளுக்கு வெளிநாட்டு வளங்களைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, உள்நாட்டுப் பாதுகாப்புத் தளவாட உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாதுகாப்பு உள்ளிட்ட முக்கியத் துறைகளில் தன்னாட்சியும், முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பத் திறனும் அவசியமாகும். அதோடு, நவீன தொழில்நுட்பம் சார்ந்த போர் முறை உருவெடுத்துவரும் இன்றைய சூழலில், அனைத்து விதமான அவசரகால சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில் பாதுகாப்புப் படைகள் திறன் மேம்பாடு அடைய வேண்டும்.

பாதுகாப்புப் படைகளின் நவீனமயமாக்கலைத் தொடர்ந்து எழும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக போதிய நிதி ஆதரவை அளிப்பதில் மத்திய அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 2026-27-ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டை இதுவரை இல்லாத அளவில் ரூ. 2.19 லட்சம் கோடி மூலதனச் செலவு உள்பட ரூ. 7.85 லட்சம் கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவு பெறும் தொலைநோக்குத் திட்டத்தின் முயற்சி காரணமாக, கடந்த 2014-15-ஆம் ஆண்டில் ரூ. 46,429 கோடியாக இருந்த பாதுகாப்புத் தளவாட உற்பத்தி, 2025-26-ஆம் ஆண்டில் ரூ.1.78 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதுபோல, பாதுகாப்புத் தளவாட ஏற்றுமதி 2014-15-ஆம் ஆண்டில் ரூ. 2,000 கோடியாக இருந்தது. 2025-26-ஆம் ஆண்டில் ரூ. 40,000 கோடியாக அதிகரித்தது.

ராஜ்நாத் சிங்



வரும் 2029-ஆம் ஆண்டுக்குள், பாதுகாப்புத் தளவாட உற்பத்தியை ரூ. 3 லட்சம் கோடி மதிப்புக்கும்,ஏற்றுமதியை ரூ.50,000 கோடி அளவுக்கும் உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாறிவரும் நவீன போர் முறைகளுக்கு ஏற்ப, முப்படைகளும் தங்களின் கட்டமைப்பு மற்றும் திறன்களை தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றன. இந்திய ராணுவத்தின் புதிய பிரிவுகளான 'ஆசானி', 'பைரவ்', 'சக்திபான்' போன்றவை, தற்போதைய செயல்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதிலும், போர்க்களத்தின் மாறிவரும் சூழலுக்கு ஏற்பத் தங்களை தகவமைத்துக் கொள்வதிலும் திறன்களை நிரூபித்துள்ளன என்றார்.

தொழில்நுட்பத் தயார்நிலை: '21-ஆம் நூற்றாண்டில் ராணுவத்தையும் தொழில்நுட்ப தயார்நிலையையும் பிரிக்க முடியாது' என்றும் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாதுகாப்புத் துறை சார்ந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்றபோது இக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், 'வழக்கமான மற்றும் வழக்கத்திற்கு மாறான போர்முறைகளுக்கு இடையிலான வேறுபாடு தொடர்ந்து மறைந்து வருகிறது. எனவே, போர் முறையில் தொழில்நுட்பம் மிக முக்கியமானது. 21-ஆம் நூற்றாண்டில் ராணுவத் தயார்நிலை என்பது, தொழில்நுட்பத் தயார்நிலையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது.

மேலும், தற்சார்பு இந்தியா என்பதை, தொழில்நுட்ப இறையாண்மைக்கான அம்சமாக புரிந்துகொள்ள வேண்டும். அதன் பொருள் எல்லாவற்றையும் நாமே உற்பத்தி செய்வது என்பது அல்ல; மாறாக, நமது முக்கிய பாதுகாப்புத் தேவைகள் வெளிப்புற சார்புகளுக்கு பணயக் கைதிகளாக ஆக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதாகும்' என்று குறிப்பிட்டார்.

வக்ஃப் சட்டத்துக்கு எதிரான மனுக்கள்: விசாரணை ஜன. 21-க்கு ஒத்திவைப்பு

புது தில்லி, நவ. 3: வக்ஃப் திருத்தச் சட்டம் 2025-இன் அரசமைப்பு செல்லத்தக்க தன்மையை எதிர்த்து தொடரப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை அடுத்த ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதிக்கு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்தது.

முஸ்லிம்கள் தானமாகவும், நன்கொடையாகவும் அளிக்கும் நிலங்கள் மற்றும் சொத்துகளை வக்ஃப் வாரியம் நிர்வகித்து வருகிறது. இந்த நிலையில், வக்ஃப் சொத்துக்களின் நிர்வாகத்தைச் சீரமைக்கும் நோக்கில், 1995-ஆம் ஆண்டின் வக்ஃப் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் வகையில், மத்திய அரசு வக்ஃப் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த வக்ஃப் திருத்தச் சட்டம் 2025-க்கு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அந்தச் சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியது.

இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் 70-க்கும் மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றைப் பரிசீலித்த உச்சநீதிமன்றம், அதில் 5 மனுக்களை மட்டும் விசாரணைக்குத் தேர்வு செய்து, இந்த வழக்குக்கு 'மறு ஆய்வு: வக்ஃப் திருத்தச் சட்டம் 2025' என்று தலைப்பிட்டு, அந்தச் சட்டத்தில் இடம்பெற்ற மூன்று நடைமுறைகளுக்கு இடைக்காலத் தடை விதிப்பது குறித்து விசாரித்தது. விசாரணை முடிவில் அளித்த இடைக்காலத் தீர்ப்பில், சட்டத்தில் முக்கியமான சில பிரிவுகளுக்கு மட்டும் இடைக்காலத் தடை விதித்தது.

குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள்தான் சொத்துகளை வக்ஃப் வாரியத்துக்கு தானமாக அளிக்க முடியும் என்ற நடைமுறை மற்றும் வக்ஃப் சொத்து அரசு நிலமா என்பதைத் தீர்மானிக்க மாவட்ட ஆட்சியருக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் ஆகிய பிரிவுகளுக்கு இடைக்காலத் தடையை விதித்தது.

மேலும், மத்திய வக்ஃப் கவுன்சிலில் முஸ்லிம் அல்லாத உறுப்பினர்கள் எண்ணிக்கை நான்குக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்றும், மாநில வக்ஃப் வாரியங்களில் இந்த எண்ணிக்கை மூன்றுக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டது.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.எம். சுந்தரேஷ், பி.பி. வராலே ஆகியோர் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஆஜரான வழக்கின் ஒருங்கிணைப்பு வழக்குரைஞர், 'இந்த வழக்கில் முன்னர் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில், 5 முதன்மை மனுக்கள் மட்டும் விசாரணைக்கு ஏற்கப்பட்டன.

மற்ற 135 மனுக்களும் இடைக்கால மனுக்களாக மாற்றப்பட்டன. இந்த இடைக்கால மனுதாரர்கள் அனைவரும், புதிய எழுத்துபூர்வ மனுக்களைத் தாக்கல் செய்தால், அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்படும்' என்றார்.

இதைக் கேட்ட நீதிபதிகள், 'இந்த வழக்கில் இடைக்கால மனுக்களைத் தாக்கல் செய்த மனுதாரர்கள், இரண்டு வாரங்களுக்குள் புதிய மனுக்களைத் தாக்கல் செய்யவேண்டும். அதன் நகலை, வழக்கில் ஒருங்கிணைப்பு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ள வரிடமும் மனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

சமர்ப்பிக்கப்படும் இந்த எழுத்துபூர்வ மனுக்களுக்கு, அரசுத் தரப்பு கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும். இந்த மனுக்கள் தாக்கல் அனைத்தும் வரும் டிசம்பர் 31-ஆம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டு, விசாரணையை 2027-ஆம் ஆண்டு ஜனவரி 21-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

முன்னதாக, வழக்கில் இடைக்கால மனுக்கள் விசாரணைக்கு ஏற்கப்படுவதை சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா எதிர்த்தார்.

மனுக்களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் அதிகரிப்பதைத் தவிர்க்க, 5 முதன்மை மனுக்கள் மட்டும் விசாரணை எடுத்துக் கொள்ளப்படும் என்று உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு ஏப்ரல் 17-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவை சுட்டிக்காட்டிய அவர், அந்த நிலைப்பாட்டிலிருந்து மாறக் கூடாது என்று வாதிட்டார்.

என் மீது அவதூறு வழக்கை பிரதமர் மோடி தொடுக்காதது ஏன்?

புது தில்லி, நவ.3: 'பிரதமர் மோடி வெளிநாடுகளில் இருந்து உதவி பெறுகிறார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக என் மீது அவதூறு வழக்கை பிரதமர் தொடுக்காதது ஏன்?' என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி செவ்வாய்க்கிழமை கேள்வி எழுப்பினார்.

இந்தியாவைச் சீர்குலைக்க வெளிநாடுகளில் இருந்து ராகுல் உதவி பெறுவதாக பாஜக குற்றஞ்சாட்டியது தொடர்பாக, வெளிப்படையான விவாதத்துக்குத் தயார் என்று திங்கள்கிழமை சவால் விடுத்த ராகுல், தற்போது இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

தனது எக்ஸ் பக்கத்தில் அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவில், 'பொது விவாதத்துக்கு சவால் விடுத்து 24 மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. எதிர்க்கட்சியை தேச விரோத சக்தி என்று பிரதமர் குற்றஞ்சாட்டினார். யார் தேச விரோதி என்று பொது விவாதம் நடத்த நான் தயாராக உள்ளேன். விவாதம் நடத்தும் இடத்தை நீங்களே தேர்வு செய்யலாம்.

வெளிநாட்டு சக்திகளுடன் யாருக்குத் தொடர்பு உள்ளது? அந்த வெளிநாட்டு தொடர்புகளின் திட்டம் மற்றும் தன்மை என்ன உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் குறித்து ஊடகங்கள், இளைஞர்கள் முன்னிலையில் மேஜையின் இருபுறமும் அமர்ந்து நாம் விவாதிப்போம். இந்த விவாதத்துக்கு நடுவராக பிரதமரே யாரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளலாம். ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத்தைக் கூட நியமித்துக் கொள்ளலாம்.

இந்த விவாதத்தின்போது, நாட்டின் நிதி நடைமுறை, நிதி கட்டமைப்பு, அமெரிக்காவுடன் அவசரகதியில் ஒப்பந்தம் போட்டது ஏன்?, அமைச்சரவைக்குக் கூட தெரிவிக்காமல் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது ஏன்?, அமெரிக்காவில் தொழிலதிபர் அதானி மீதான வழக்கு முடித்துவைக்கப்பட்டது ஏன்?, எப்ஸ்டீன் ஃபைல்ஸ் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து வெளிப்படையாக விவாதிப்போம். உண்மை வெளிவரட்டும். அனைத்து விஷயத்திலும் மக்களுக்குத் தெளிவு ஏற்படட்டும்.பாஜக மற்றும் அதன் தலைவர்கள் மீது முன்வைத்த பல்வேறு விமர்சனங்களுக்கு என் மீது அவதூறு வழக்குகள் தொடரப்பட்டன. சுமார் 45 அவதூறு வழக்குகள் தொடரப்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

ஆனால், பிரதமர் மோடி வெளிநாடுகளில் இருந்து உதவி பெறுகிறார் என்ற குற்றச்சாட்டு தொடர்பாக என் மீது இன்னும் அவதூறு வழக்கு தொடரப்படவில்லை. இந்த விவகாரம் தொடர்பாகவும், என் மீது அவதூறு வழக்கு தொடருங்கள். வெளிப்படையாக விவாதமும் நடத்துவோம். பிரதமர் மோடிக்கு தீபாவளி வாழ்த்துகள்' என்று குறிப்பிட்டார்.

ராகுல் கேள்வி



சமூக வலைதளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட விடியோ பதிவில் பேசிய ராகுல் காந்தி.

முன்னதாக, நாட்டில் வன்முறை போராட்டம் மூலம் ஆட்சி மாற்றத்தை நிகழ்த்தும் சதியில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளதாக திங்கள்கிழமை குற்றஞ்சாட்டிய பாஜக, 'காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி, சோனியா காந்தி ஆகியோரை 'புரோக்ரெசிவ் இன்டர்நேஷனல்' என்ற கம்யூனிஸ்ட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தில்லியில் கடந்த 2025 ஏப்ரலில் சந்தித்தனர். இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்களில் இந்த அமைப்புடன் காங்கிரஸ் ஒருங்கிணைந்து செயல்பட்டதா என்பதை அக் கட்சி விளக்க வேண்டும்' என்று குறிப்பிட்டது.

அதுபோல, குஜராத்தில் நிகழ்ச்சி ஒன்றில் அண்மையில் பேசிய பிரதமர் மோடி, ராகுலின் பெயரைக் குறிப்பிடாமல் அவரை விமர்சித்தார். அப்போது, 'வெளிநாட்டுப் பயணத்தின்போது ரகசியமாக யாரைச் சந்திக்கிறார்கள்? அவர்களுக்கு ஆதரவளிக்கும் தேச விரோத சக்திகள் யார்? இந்தியாவின் எதிரிகளின் மொழியில் பேசுவது யார்? இதன் மூலம் நாம் பல உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியும்' என்று பேசினார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் திங்கள்கிழமை ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில், 'பிரதமர் மோடி தேசத்திடம் பொய் உரைப்பதை நிறுத்த வேண்டும். நீங்கள் வெளிநாட்டு உதவியுடன்தான் பிரதமரானீர்கள். வெளிநாட்டு உதவியுடன்தான் இப்போது வரை அப்பதவியில் தொடர்கிறீர்கள்.

உங்களுக்கான நிதி முழுவதும் வெளிநாட்டில் இருந்தே வருகிறது. அதுவே உங்களையும் கட்டுப்படுத்துகிறது. வெளிநாட்டு சமூக ஊடகங்கள் முழுவதும் உங்களையே ஆதரிக்கின்றன. இது தொடர்பாக வெளிப்படையான விவாதத்துக்குத் தயாராக உள்ளேன்' என்று குறிப்பிட்டிருந்தார்.

தேசிய மாநாட்டுக் கட்சி எம்.பி. ருஹுல்லா மெஹதி விலகல்

பட்காம், நவ. 3: தேசிய மாநாட்டுக் கட்சியில் இருந்து ஸ்ரீநகர் மக்களவைத் தொகுதி எம்.பி. ஆகா சையது ருஹுல்லா மெஹதி (50) செவ்வாய்க்கிழமை விலகினார்.

தேர்தலின்போது ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை மீட்டுத் தருவதாக வாக்குறுதி அளித்த தேசிய மாநாட்டுக் கட்சித் தலைமை அதை நிறைவேற்ற முயற்சிக்கவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது தந்தை அகா சையது மெஹதியின் 26-ஆவது நினைவு தினத்தையொட்டி பட்காமில் செவ்வாய்க்கிழமை தனது ஆதரவாளர்கள் பங்கேற்ற பொதுக் கூட்டத்தை அவர் நடத்தினார்.

சிறப்பு அந்தஸ்தை மீட்கவில்லை எனக் குற்றச்சாட்டு



ஜம்மு-காஷ்மீரின் பட்காமில் தனது ஆதரவாளர்களிடையே பேசிய ருஹுல்லா மெஹதி.

அப்போது அவர் பேசுகையில், 'ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை மீட்டுத் தரும் போராட்டத்தை தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா கைவிட்டுவிட்டார்.

அதேபோல, கைதிகள் விடுவிப்பு, இலவச மின்சாரம் உள்ளிட்ட 2024 சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குறுதிகளையும் ஆளும் தேசிய மாநாட்டுக் கட்சி கண்டுகொள்ளவில்லை.

இது தொடர்பாக மக்கள் என்னிடம் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டனர். எனவே, இதற்கு மேலும் இக்கட்சியில் தொடர முடியாது.

சிலர் என்னை தனிக்கட்சி தொடங்க கோரியுள்ளனர். ஜம்மு-காஷ்மீர் மக்களின் கௌரவம், மரியாதையைக் காக்கும் நோக்கில் கட்சி தொடங்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உள்ளது.

தேசிய மாநாட்டுக் கட்சியின் கோரிக்கையை ஏற்று கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அவர்களை ஆதரித்தது எனது தவறு. அவர்கள் வேண்டுமானால் தாங்கள் அளித்த தேர்தல் வாக்குறுதிகளைக் கைவிட்டிருக்கலாம், ஆனால் நான் எதையும் கைவிடவில்லை என்றார்.

கர்நாடகம்: பாஜக சார்பில் 'ஜனநாயகத்தை பாதுகாப்போம்' நடைப்பயணம்

கோலார், நவ.3: வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்.) நடவடிக்கையை அரசியலாக்கி, இளைஞர்களை தவறாக வழிநடத்தி காங்கிரஸ் மோதலைத் தூண்டுவதாக குற்றம்சாட்டி, பாஜக சார்பில் 'ஜனநாயகத்தை பாதுகாப்போம், அராஜகத்தை ஒழிப்போம்' என்ற பெயரில் செவ்வாய்க்கிழமை கர்நாடக மாநிலம், கோலாரில் நடைப்பயணம் நடைபெற்றது.

தேசியக் கொடிகளை ஏந்திய படி டீம் லைட் சர்க்கிளில் இருந்து தொடங்கிய இந்த நடைப்பயணத்தில், பாஜக தேசிய பொதுச் செயலாளரும், கர்நாடக மாநில பொறுப்பாளருமான ஹரீஷ் துவி வேதி, மாநிலத் தலைவர் விஜயேந்திரா, பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆர். அசோக், சட்ட மேலவை எதிர்க்கட்சித் தலைவர் செலுவாதி நாராயணசாமி, முன்னாள் முதல்வர் எடியூரப்பா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஏராளமானோர் பங்கேற்பு

மத்தியில் பிரதமர் மோடி தலைமையிலான அரசுக்கு எதிராக இண்டி கூட்டணி முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில், பாஜக கர்நாடகம் முழுவதும் ஒரு மாத கால பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இந்த நடைப்பயணம் நடைபெற்றது.

நடைப்பயணத்தில் விஜயேந்திரா பேசுகையில், பிரதமர் மோடியின் தொடர்ச்சியான மக்கள் செல்வாக்கை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மத்தியில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை சீர்குலைக்க ராகுல் காந்தி முயற்சிக்கிறார். மக்களவைத் தேர்தல்களில் நாட்டின் மக்கள், குறிப்பாக அரசியல் விழிப்புணர்வு கொண்ட வாக்காளர்கள், மோடிக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறார்கள். இதை ராகுல் காந்தியால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதன் காரணமாகவே ஜந்தர் மந்தரில் தினமும் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

நாடுமுழுவதும் அராஜக சூழலை உருவாக்க முயற்சிக்கிறார்கள். நாடு முழுவதும் பல முறை வாக்காளர் பட்டியல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், காங்கிரஸ் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையை எதிர்த்து வருகிறது. காங்கிரஸ் கட்சிக்கு எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை மீதும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீதும் நம்பிக்கை இல்லை. உச்சநீதிமன்றத்தின் மீதும் நம்பிக்கை இல்லாமல் அரசமைப்பு அமைப்புகள் மீது சந்தேகத்தை ஏற்படுத்தி வருகிறார்கள்.

வங்கதேசம், இலங்கை, நேபாளம் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற சம்பவங்களைப் போல இந்தியாவிலும் அமைதியின்மையை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன.

'ஜனநாயகத்தைப் பாதுகாப்போம், அராஜகத்தை ஒழிப்போம்' என்ற நடைப்பயணம், தேச விரோத சக்திகள், அமைப்புகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகிறது. இதே போன்ற நடைப்பயணம் கர்நாடகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தப்படும்.

முந்தைய பாஜக தலைமையிலான கர்நாடக அரசு விவசாயிகள், ஏழைகள் மற்றும் தலித்துகள் மீது அக்கறை கொண்டு ஆட்சி நடத்தியது. மாநிலத்தில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வரும் என்றார்.

HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்.

பதிவு அலுவலகம் : ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத் - 09.

கிளை அலுவலகம் : HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிட்., எண். 36/71, சுந்தர் டவர்ஸ், சாலை ரோடு, உறையூர், திருச்சி - 620003.

ஏல விற்பனை அறிவிப்பு - விலைப்புள்ளி மற்றும் E-ஏலம்

(கடன்தாரர் / கூட்டு விண்ணப்பதாரர் / பொது மக்களுக்கு) (சர்ஃபாசி சட்டம்' 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட **HDB :.பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்** - ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை **"இருக்கின்ற இடத்தில்"** & **"இருக்கின்ற நிலைமையில்"** என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் சுவாதீனம் எடுத்துள்ளார்.

1. விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி: 1). சந்திரசேகர் நடராஜன், எண். 25-B4, ராமானுஜம் நகர், கரூர், கரூர் HO - 639001 தமிழ்நாடு. **மேலும்,** கதவு எண். B4, சர்வே எண். 664/2, ராமானுஜம் நகர், லட்சுமிநாராயணசமுத்திரம் கிராமம், மேல கரூர், கரூர் HO - 639001. 2. N ஜோதி, எண். 25-B4, ராமானுஜம் நகர், கரூர், கரூர் HO - 639001 தமிழ்நாடு. **(2) கடன் கணக்கு எண் : மொத்த நிலுவைத்தொகை 14.07.2026 ம் தேதியின் படி, கடன் கணக்கு எண். 53728353ல் இந்திய ரூபாயில். 1,49,68,743/- (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) ; கடன் கணக்கு எண். 54638737 ல் இந்திய ரூபாயில் 7,75,468.67/- (ரூபாய் ஏழு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து நானூற்று அறுபத்து எட்டு மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்) என இரண்டு கணக்குகளுக்கும் சேர்ந்து மொத்தம் ரூ.1,57,44,211.67/- (ரூபாய் ஒரு கோடியே இம்பத்து ஏழு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து இருநூற்று பதினொன்று மற்றும் பைசா அறுபத்து ஏழு மட்டும்)** மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிகழ் செலவுகள் / செலவுகள் ஆகியன.

ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விவரங்கள் - இல்லை

அசையா சொத்துக்களின் விவரங்கள் : கரூர் மாவட்டம், கரூர் பதிவு மாவட்டம், மேலகரூர் சார் பதிவு அலுவலகம், LNS கிராமம், சர்வே எண். 664, உட்பிரிவு படி சர்வே எண். 664/2 ல் உள்ள 9003 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய அனைத்து இதர வழி வசதி மற்றும் பாதை உரிமைகள்., இது பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் "ராமானுஜம் நகர்" ல் உள்ளது. 30 அடி சாலை, பாக்கியம் மற்றும் பெரியசாமி சொத்துக்கு **- வடக்கு**, கிழமேல் தண்ணீர் கால்வாய்க்கு **- தெற்கு**, முத்துசாமி முதலியார் மற்றும் பிறர் சொத்துக்கு **- கிழக்கு**, காளியப்ப கவுண்டர் மற்றும் பிறர் கட்டிடம் சொத்துக்கு **- மேற்கு**. இந்த எல்லைகளுக்கு மத்தியில் உள்ள தாக்கு I ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 77.3 அடி., தெற்கு புறம் 8.3 அடி., தென்வடல் மேற்கு புறம் 32 அடி., கிழக்கு புறம் 0 அடி., என மொத்தம் 1228 சதுர அடி. தாக்கு II ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 80.3 அடி., தெற்கு புறம் 84.9 அடி., தென்வடல் மேற்கு புறம் 0 அடி., கிழக்கு புறம் 29 அடி., என மொத்தம் 1163 சதுர அடி. தாக்கு III ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 84.9 அடி., தெற்கு புறம் 90.9 அடி., தென்வடல் மேற்கு புறம் 0 அடி., கிழக்கு புறம் 19.06 அடி., என மொத்தம் 809 சதுர அடி. தாக்கு IV ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 90.9 அடி., தெற்கு புறம் 89.9 அடி., தென்வடல் மேற்கு புறம் 41.3 அடி., கிழக்கு புறம் 0 அடி., என மொத்தம் 1802 சதுர அடி. தாக்கு V ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் குறுக்காக 98.3 அடி., தெற்கு புறம் 81.6 அடி., தென்வடல் மேற்கு புறம் 0 அடி., கிழக்கு புறம் 41.3 அடி., என மொத்தம் 1649 சதுர அடி. தாக்கு VI ன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் 78.9 அடி., தெற்கு புறம் குறுக்காக 98.3 அடி., தென்வடல் மேற்கு புறம் 59.9 அடி., கிழக்கு புறம் 0 அடி., என மொத்தம் 2352 சதுர அடி. மொத்தம் 9003 சதுர அடி. வெட்டியுல் B - இதன் மேற்கண்ட வெட்டியுல் A கொத்தில் உள்ள 9003 சதுர அடி பரப்பில் உள்ள 750-1/4 சதுர அடி பிரிபடாத பங்கு இடம். வெட்டியுல் C - "ஸ்ரீவாலயம் அவென்யூ" ப்ளாக் B ல் உள்ள 2122 சதுர அடி கட்டிட மேற்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். B-4 மற்றும் அதனுடன் கூடிய பொது பரப்பில் உள்ள விகிதாச்சார பங்கு.

அடிப்படை விலை	டேவணித்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	ஏல தேதி & நேரம்	EMD செலுத்த கடைசி தேதி & நேரம்
ரூ.1,48,54,000/-	ரூ.14,85,400/-	ரூ.1,00,000/-	03.12.2026 காலை 11.00 முதல் ந